**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
**முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.**
**வழக்கு எண்.C.C. 460/2018**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.06.2025.

**அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனி | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : பச்சையப்பன் | | |
| கிராமம் | : நடுப்பட்டு | வயது | : 69 |

சாட்சியையும் எதிரிகளையும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டடப்பட்டது.

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் நடுப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 விஜயகுமார் எனது மகன் ஆவர். பட்டியல் சாட்சி 3 ஆண்டாள் எனது மனைவி. பட்டியல் சாட்சி 4 அமராவதி எனது அக்கா. ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும்.

2. கடந்த 2015–ஆம் வருடம் ஒரு நாள் இரவு 07.00 மணியவில் நீதிமன்றதில் வழக்கு தொடுத்து எனக்கு சாதகமாக தீர்ப்பான நடுப்பட்டு கிராமத்தில் உள்ள எனது நிலத்தில் அமைந்துள்ள வீட்டில் நான், பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 ஆகியோர்கள் இருந்த போது 1–ஆம் எதிரியிடம் மேற்படி சொத்தை நான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து ஜெயித்துள்ளேன். எனவே, எனது சொத்தில் பிரவேசிக்காதீர்கள் என்று கூறினேன். அதற்கு 1–ஆம் எதிரி அப்படி தான் வருவோம் என கூறி என்னை அடித்தார். மேலும் 3–ஆம் எதிரி என்னை அடித்தார். அதனை தடுத்த எனது மகன் விஜயகுமாரை 3–ஆம் எதிரி அடித்தார். மேற்படி எனது மகனை காப்பாற்ற சென்ற எனது மனைவியை 2–ஆம் எதிரி அடித்தார். எங்களது சத்தம் கேட்டு எனது அக்கா வெளியே வந்து பார்த்து விட்டு மீண்டும் வீட்டிற்குள் சென்று விட்டார். அவருக்கு சற்று காது கேட்காது. காயம் அடைந்த நான், என் மனைவி, என் மகன் ஆகியோர்கள் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

3. எதிரிகளிடமிருந்து ஆயுதங்களை கைப்பற்றி காவலர்களிடம் நான் சமர்ப்பிக்கவில்லை. ஆயுதங்களை காவலர்கள் கைப்பற்றி என்னிடம் விசாரணை செய்யவில்லை. எனது வீட்டிற்கு எதிரே தார் சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலை வழியாக தான் ஆலம்பூண்டியிலிருந்து நடுப்பட்டு கிராமத்திற்கு மக்கள் செல்ல இயலும் என்றால் சரிதான். 2–ஆம் எதிரியின் தாத்தாவான ஜெயராம் நாயக்கர் என்பரிடம் 58 செண்ட் நிலத்தை கிரையமாக கொடுக்கிறேன் என்று கூறி முன் பணமாக ரூ.48,000/– பெற்றேன் என்றால் இல்லை. மேற்படி முன் பணத்தை பின்னிட்டு ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் 2–ஆம் எதிரியின் தந்தையிடம் திரும்பி செலுத்தி விட்டேன் என்றால் சரியல்ல. எனது கிணற்றிலிருந்து தண்ணீரை எதிரியின் நிலத்தின் வழியாக தான் எனது நிலத்திற்கு கொண்டு செல்ல இயலும் என்றால் சரியல்ல.

4. 2–ஆம் எதிரியின் தந்தையிடம் தண்ணீர் எடுத்து செல்வதற்காக பைப் லைன் புதைக்க அனுமதி கோரினேன் என்றால் இல்லை. எதிரிகள் எனக்கு துரத்து பங்காளிகள் ஆவர். எதிரிகள் நிலத்தில் நான் தண்ணீர் எடுத்து செல்ல அவர்கள் அனுமதி மறுத்ததால் எதிரிகள் மேற்படி சாலையில் செல்வதை நான் தடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இடை கால உத்தரவு பெற்றுள்ளேன். மேற்படி உத்தரவின் நகலை நான் காவலர்களிடம் கொடுத்துள்ளேன். அரசு தார் சாலை அமைத்துள்ள இடத்திற்கு நான் இடைகால உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் நீதிமன்றம் எனக்கு நிரந்தர தடை உறுத்து கட்டளை பிறப்பித்துள்ளது. மேற்படி அசல் வழக்கின் எண்.243/2003 ஆகும். இடைகால மனுவின் எண் எனக்கு தெரியாது.

5. கடந்த 2015–ஆம் வருடம் சம்பவம் நடைபெற்றது, தேதி தெரியாது மாலை 07.00 மணிக்கு நடைபெற்றது. 2–ஆம் எதிரி ஊர் விசேஷத்திற்காக மேற்படி தார் சாலையில் வந்தவரை நானும் எனது மனைவி மற்றும் மகன் தான் அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரிகள் தான் எங்களை தாக்கினர். எதிரிகள் தான் முதலில் எங்கள் மீது புகார் அளித்தனர் என்றாலும் அதன் குற்ற எண்.108/2015 என்றாலும் சரிதான். ஆனால், நாங்கள் மருத்துவமனைக்கு சென்றிருந்த காரணத்தினால் அவர்கள் முதலில் புகார் அளித்து விட்டனர்.

6. எதிரிகளை நான் தாக்கிய போது எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரவு சுமார் 08.30 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துமனைக்கு சென்ற தேதி நினைவில் இல்லை. 3 நபர்கள் என்னை தாக்கியதாக மருத்துவரிடம் கூறினேன். 4 நாட்கள் கழித்து நான் எனது மகன், மனைவி ஆகியோர் டிஸ்சார்ஜ் ஆனோம். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே வழி சம்மந்தமாக தான் முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் எல்லா வகையிலும் முன் விரோதம் உள்ளது.

7. காவலர்கள் என்னை இவ்வழக்கு தொடர்பாக என்று விசாரித்தனர் தற்போது நினைவில்லை. மருத்துவமனையில் விசாரித்த பிறகு காவலர்கள் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை. நான் என் நிலத்தில் வீடு கட்டி உள்ளேன் என்றாலும் எதிரிகள் அவர்களது நிலத்தில் வீடு கட்டிள்ளனர் என்றாலும் மேற்படி எங்களது வீடுகளுக்கு நாங்கள் மற்றவரின் வீடு வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் நான் எதிரிகளின் வீட்டு வழியாக செல்வது கிடையாது. நான் எதிரிகளை தாக்கி விட்டேன் என்றாலும் அதில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் மேற்படி காயங்களை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என் மீது இந்நீதிமன்றத்தில் CC.No.432/2018 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிகளை அடித்த காரணத்தினால் தான் காவலர்கள் என் மீது மேற்படி வழக்கை தொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளை நான் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.